# சிவப்பு இரவுகள்



காத்தான்குடி றஹீம்

# சிவப்பு இரவுகள்

காத்தான்குடி றஹீம்

பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்

சிவப்பு இரவுகள் ❖ கவிதைகள் ❖ ஆசிரியர் : காத்தான்குடி றஹீம் ❖
© H.M.M. றஹீம் ❖ முதல் பதிப்பு : டிசம்பர் 2013 ❖
வெளியீடு : பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம். ❖
அச்சு : எவகிறீன், மட்டக்களப்பு ❖ அட்டைப்படம் : இணையம் ❖
வடிவமைப்பு, இணைப்பாளர் : த. மலர்ச்செல்வன். ரூ. 300/-

Sivappu Iravukal ❖ Poems ❖ Author : Kattankudy Raheem ❖
© H.M.M.Raheem ❖ Language : Tamil ❖ First Edition : December 2013 ❖ Size : Demy 1 x 8 ❖ Paper : 80g Bank ❖ Page : 69 ❖ Copies : 350 ❖ Published by Department of Cultural Affairs, Eastern Province ❖ Design and Co ordinating : T. Malarchselvan ❖ Printed : Evergreen Printers, Batticaloa.

ISBN - 978 - 955 - 4628 - 09 - 0

என் அருமை

உம்மாவுக்கும்

வாப்பாவுக்கும்

## நன்றி

த. மலர்ச்செல்வன்

பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கிழக்கு மாகாணம்

மாவட்ட பண்பாட்டுப்பிரிவு, மட்டக்களப்பு

எனவே இனி

தினக்கதிர்

சரிநிகர்

தினகரன்

வீரகேசரி

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| தலை விரித்த முருங்கை மரம் | 08 |
| கழுகு சுமந்து வந்த கோழிக்குஞ்சு | 11 |
| ஓலமிடும் இதயங்கள் | 14 |
| ஏழு வெள்ளம் போடும் மாரி | 16 |
| குட்டித் தாய்ச்சி | 18 |
| வா வந்து சுடு | 21 |
| சிவப்பு இரவு | 23 |
| மண்டை ஓடுகளும் சில எலும்புக் கூடுகளும் | 26 |
| விலங்குகளுக்குள் முடக்கப்பட்ட என் சுதந்திரம் | 29 |
| நான் ஆவலாய் எதிர்பார்த்த நட்சத்திரங்கள் | 32 |
| தூண்டில் பொறுத்த மீன் மாதிரி நான் | 34 |
| தலைப் பாரமிறக்கி | 38 |
| எனது சோற்றுப் பானை பற்றிய இரவு | 40 |
| ஆத்மாவுக்கு தூண்கள் தரும் சங்கிலித் தொடர்கள் | 42 |
| எரிவும் பிரிவும் | 47 |
| அழைப்பு | 53 |
| புதுக்கவிதை | 55 |
| முடிவுக்குள்... ஒரு விடிவு | 58 |
| ஏய் நிலவே | 62 |
| சகோதரரே இரங்குங்கள் | 64 |
| ஒரு ஏழ்மை பேசுகிறது | 67 |
| என்னுடைய புதிய பாதை | 68 |
| அன்புத் தங்கையே | 69 |

முன்னுரை

## இரத்தங்களின் சாட்சி

எண்பதுகளில் ஈழத்துக் கவிதைப் போக்கில் மாற்றம் ஏற்படுகின்ற தருணத்தில் மரபுக் கவிதைகளினூடாக தினகரனில் அறிமுகமானவர் தான் காத்தான்குடி றஹீம். எதிகை, மோனை, சீரும், தளையுமென கட்டியிறுகிக் கொண்டிருந்த றஹீம் 90களில் சரிநிகரின் வருகையோடு தன் பாடு பொருளிலும், வடிவத்திலும் மாற்றம் கொள்கின்றார்.

யுத்தத்தின் கொடுமைகளும், அடைக்கப்பட்ட தேசத்தையும், சுதந்திரமாக நடமாடமுடியாத தெருக்களையும், இரத்தம் தோய்ந்த பள்ளியென அவரின் கவிதைகள் வீரியம் கொள்கின்றன.

றஹீமினுடைய கவிதைகளைச் சரிநிகர், எனவே இனி என்பவற்றில் படித்த ஞாபகத்திலே அவரின் பெயர் எனக்குள் விழுந்தது. அவரின் ஒப்புதலைக்கூட தொலைபேசியினூடாகவே பெற்றிருந்தேன். அச்சூழலில் தான் அவரின் தொகுப்பின் பெயர் சிவப்பு இரவாக அவசரமாக பெயரிடப்பட்டது.

தொகுப்பிற்கான வேலைகள் சூடேறிய நாட்களில் அவரிடம் பல கவிதைப் பிரதிகள் தொலைந்திருந்தன. ஒருகட்டத்தில் தொகுப்பை கைவிடுவோம் என்ற நிலைக்குக்கூட வந்திருந்தார். எனினும் நான் விடவில்லை. தொலைந்தவை சிலவற்றை தேடியெடுத்தும் ஆரம்பகால எழுத்துக்களையும், மரபுக்கவிதைகளையும் சேர்த்தே வெளியிடலைத் திட்டமிட்டேன். இச்சூழலில்தான் அவருடைய கவிதைப் பிரதிகளை ஒன்று சேர்த்து வாசித்தேன். அவரின் கவிதைகளில் நல்ல தலைப்புக்களும், நல்ல கவிதைகளும் இருந்தன. “ஏழுவெள்ளம் போடும் மாரி” எனும் பெயரினை தொகுப்பிற்கு வைப்பதற்கு முயற்சித்தும் ஏற்கனவே கொடுக்கப்பட்ட சிவப்பு இரவுகள் திணைக்களத்தின் வெளியீடு தொடர்பாக அங்கீகரிக்கப்பட்டதனால் மாற்றத்திற்கான அவாவுகை ஈடேறவில்லை.

றஹீம் இரண்டாம் தடவையாக சோர்ந்து போனார். ஆனால் அவரின் கதைகள் சோர்ந்து போனவையல்ல. 90 களின் பின் எழுதிய கவிதைகள் பெறுமதிமிக்கவை. தனது முஸ்லீம் சமூகம் எதிர்கொண்ட நெருக்கடிகளை, ஒடுக்கு முறைகளை கவிதைகளாகத் தந்து பல்வேறு தளங்களில் அதிர்வுகளை ஏற்படுத்தியவர். மாற்றுக்குரலாக ஒலித்தவர். எனினும் இன்று ஓய்ந்து போயிருக்கின்ற அவரின் குரல் இத்தொகுப்பினூடாக மீண்டும் ஒலிக்க வேண்டுமென்பதே எமது அவா.

**த. மலர்ச்செல்வன்**
*மாவட்ட கலாசார இணைப்பாளர்*

*கச்சேரி*
*மட்டக்களப்பு.*
***24.12.2013***

# என்னுரை

யுத்தம் முடிந்த பிற்பாடு நிறைய எதிர்பார்ப்போடு சுதந்திரத் தென்றலை அனுபவிக்க இருந்த மக்கள் கவிதை பற்றிய ஞாபகமே அற்று விலையும் பசியும் மனஅழுத்தமும் என விக்கித்தவிக்கும் ஓர் இறுக்கமான அவஸ்தைக் காலத்தில் என் கவிதை தன் முகத்தைக் காட்டுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு. த. மலர்ச்செல்வன் அவர்கள் எனது பாடசாலைக்கு வந்து எனது ஆப்த நண்பர் நஸீர் மூலமாக அறிமுகமான கணமே உங்கள் கவிதைகளைத் தாருங்கள் என திடுதிப்பென்று என்னை வேண்டினார். மறுதினம்....... எனது முழுப்பெயரையும், முகப்பு அட்டைக்குரிய பெயரையும் தொலைபேசியிற் கேட்டார். மாணவர்கட்கு முன்னே நின்ற நான் என் ஞாபகப் பரப்பிற் தலைகாட்டிய ஒன்றிரண்டு பெயர்களை உதிர்த்தேன். அதில் ஒன்றே “சிவப்பு இரவு”.

ஒருமாத மௌனம் தொடர்பறுந்து கிடந்தது. “நாளை உங்கள் கவிதைகளைத் தரவேண்டும் ” எங்கே சந்திப்பது? த. மலர்ச்செல்வனின் தொலைபேசி அரற்றிற்று என்னை. மறுநாள் காலை எனது டியூட்டறிக்கு முன்பிருந்த சிற்றுண்டிச் சாலையில் வைத்து வீட்டில் அங்கிங்கு கிடந்தவைகளைக் கூட்டிப் பொறுக்கி அள்ளிக் கொணர்ந்து அவரிடம் கொட்டினேன். அவை இலைக்கறிக் கந்தலை ஒத்து இருந்தன.

பழையது, இடையது, புதியது நவீனம் என அவர் கரங்களின் பிரித் தெடுப்பில் மொட்டவிழ்த்து முறுவலித்தது “ஏழு வெள்ளம் போடும் மாரி” என்னுமோர் கவிதை இதனை முகப்பு அட்டைக்கு எடுத்திருக்கலாம் என்று அவர் கூறினார். எனக்கும் அவ்வாறே தோன்றிற்று. பின் அப்பெயரை முகப்பு அட்டையில் போடமுயன்று தோற்றுத்தான் போனோம் நாமிருவரும்.

வெளியிட வெட்கப்பட்ட அல்லது வறுமை காரணமான எனக்கு மலர்ச்செல்வன் மூலமாக பன்னாய்க் கிடந்தவை பாயாகும் திருப்தி. கவிஞனுக்கும் புரியாத அல்லது கவிஞனுக்கு மட்டும் புரிகிற பாஷை யிலன்றி ஓரளவு நடுநிலைப்பட்ட வாசகனுக்கும் சுவைஞனுக்கும் புரிகிற மாதிரி நவீன கவிதை என்று நான் எண்ணி எழுதியவையும் மரபுக்கவிதைகளும் உங்கள் கரங்களில். நான் புதுக்கவிதையின் பூரிப்பில் இருந்த என் அந்திம காலத்தில் ஆறு ஏழு மாதத்திற்கு ஒரு தடவை ஓர் ஆலமரத்தடியில் அல்லது எங்கோ ஓர் சந்திப்பில் பத்துப் பதினைந்து நிமிடங்கள் நவீன கவிதை பற்றி என்னை உசுப்பியவர் கவிஞர் என் ஆத்மா. பின் ‘ எனவே இனி ’ யில் இருகவிக்கு களம் தந்தவர். அந்தக் கவிஞனுக்கு நன்றி சொல்வதை விளைந்து நிற்கிறது என்மனம்.

வேறு எதைச் சொல்லி சும்மா வீணடிக்க உங்கள் நேரத்தை.

நன்றியுடன்
காத்தான்குடி றஹீம்.

இல. 47/14, B. J. M. வீதி,
*காத்தான்குடி - 06*

## தலைவிரித்த முருங்கை மரம்

தலைவிரித்துப் போட்ட
முருங்கை மரம் தன்
ஒவ்வொரு பொட்டிலைகளாலும்
பூத்திருந்தது
கொட்டப் பாக்கன் குருவிகளை

அது
நட்சத்திரங்கள் சில
கோழிக்குஞ்சுகளாகி
மேகத்துக்கு மேயவரும் நேரம்

கிடந்து கொண்டிருந்தேன் நான்
நண்பர்களுடன்
கடற்கரைக்கு ஒரு
கால்மைலுக்கு அப்பால்
அடர்ந்ததொரு சோலையில்

செவ்வக வடிவில்
நான்கு தென்னைமரக்குற்றிகள்
நடுவில்
வயிறூ தியதான
குருத்து மணற் குன்றுகள்

சீனி இனிக்கிறது
எப்படியென்று சொல்லமுடியாதோ

அதுபோன்றதொரு சுகம்
இக்குருத்து மணற்பரப்பில்
புதையுண்டுகிடந்து நாலும் பேச
நண்பர்களின் புறமலையில்
தலைவைத்து
வானத்தை அண்ணார்ந்து பார்த்துக்கிடக்க
சுற்றிவர நின்ற
சவுக்கு மரத்தின்
ஊசி இலைகளால்
பாடிக்கொண்டு வரும் தென்றல்
சிந்தனைக்கு சுதியேற்றும் மூலிகையின்
மணம் கொண்டுவரும்.
சின்னவயசில்
வாழைக்காய் பொறுக்குதற்கு
லொறிப்புகையை மணந்ததுபோல
நானதை நுகர்வேன்
நானதை நுகர்வேன்

எங்களிலொருவன்
“மனைவியொடு கூடி
வானத்திற் பறக்கலாம்.
நாளைக்கு வலைபோட்டுப் பிடிப்போம்
குருவிகளை”
காதில் செய்திவிழ
“விர்” என்ற ஓசையுடன்
உதிர்வதென்ன இறகுகளா
அவை முருங்கைப்
பூக்கள்.

அன்னா இன்னா
உயிர் அடங்கப் போபவனின்
கடைசி மூச்சை எதிர்பார்த்து
உறவினர்கள் சுற்றி இருப்பதான
மௌனம்
கடல் உடல் அசைத்துச் செல்வது மட்டும்
கேட்கிறதெம் செவிகளுக்கு.

நட்சத்திரங்களை'
எண்ணிக் கொண்டிருக்கலாம் இனி
ஆகாயம் செல்லும் செய்மதிகளூடு
தொடரும் எமது ஆராய்ச்சியின் பயணம்.

ஆ........
கிளம்புது
மரக்கிளைகளின் தலைகளைத்
தடவிக் கொண்டு கிளம்புது
நிலா எண்டால் நிலாத்தான்
வெள்ளைக்கட்டி
அதன் கண்ணால்
நண்டுபிடிச்சு விளையாடிய ஞாபகம்
பொரியற் பொட்டளங்களையவிழ்த்து
ருசிபார்த்த அந்த நாள் ஞாபகம்
"இப்ப போனால்
சுட்டுப் போட்டிடுவானுகள்"
மனசுக்குள் ஆயிரம் நண்டுகள்.

28/10/94
(எனவே இனி)

## கழுகு சுமந்து வந்த கோழிக்குஞ்சு

கண்ணிறஞ்ச கனவு
அருமந்த கனவு நேற்று
ராவு நான் கண்டேன்

அழுதுகொண்டு கழுகின் காலில்
செல்லுது கோழிக்குஞ்சு
பின், அது சிரித்து வரும் ஒலி
நான் வியந்து நிற்கின்றேன்....!
தன் முதுகில் வைத்துச் சுமந்து வந்து
நின்று மேய்ந்த வீட்டு வாசலில்
விட்டு விட்டுச் செல்லுது கழுகு....
கோழிக்குஞ்சை!

பசி.... புலியொன்றை உருட்டுது
பூமியில் போட்டு.
குட்டிக்குப் பாலூட்டி வழிந்த முலையொடு
முன்னே நின்றது
கொழுத்தமானொன்று.
இனியோசிக்க ஒன்றுமில்லையென்று
எண்ணியதோ....
தின்று தீர்த்தது புலி
பச்சைப் புல்லை!

வானத்தை அண்ணாந்து பார்க்கிறேன்....
எட்டிப்பார்த்து மறைந்தது சூரியன்
ஆணையிட்டதோ அது....
இருட்டுப்புடைவை உடுத்துக்
கிழித்தது வானம்!
எங்கும் பெருமழை!
வழிந்தோடுது வெள்ளக்காடு!
பூமி ஒரு முறை குலுங்கிச் சிரித்தது
"கறைகள் கழுவப்படுகின்றன" எனக் கத்திக் கொண்டு
என் இதயம் முழுக்க ஈரம்!
மழை ஓய்ந்தது
மரம் மட்டைகள் அசைந்தன
கடலிலிருந்து வழுக்கிவந்து
என்னில் விழுந்து சிலிர்த்தது
புதிய தென்றல்
மண்ணெய் வாங்க
கடைக்குச் செல்லும் நான்
குப்பிக்குள் எஞ்சியதை
ஊற்றுகிறேன் வெள்ளத்தில்
வானத்து ஏழு வர்ணங்களும்
ஒன்றாகக் கைகோர்த்து எனைப் பார்த்துப் புன்னகைத்துப் பயணித்தது
என் உடல் எங்கும் ஆயிரம் சிறகுகள் அப்போது.

திடீரென்று
சுந்தரம் தோன்றினான்
என் தோளில் கைபோட்டான்
மறு கணம்.... மகிந்த!
மறு தோளில் கைபோட்டான்
மூவரும் மட்டுநகர் றீகலில்
செக்கன்ஷோ பார்த்துத்
திரும்புகிறோம் கொத்துரட்டியுடன்
கல்லடிக்கடற்கரையில் காத்து வாங்கிக்
கண்ணுறங்க....
இது மாரிகாலம்
ஓட்டுவழி மழைக்கைமுகத்திலடிக்க
கண் விழிக்கிறேன்....
என் வீட்டுக் கூரையில்
குயில் ஒன்று நின்று உரத்துக் கூவுகிறது....
விடியப் போகிறது என்று
ஆம்......!
விடியத்தான் போகிறது!

ஜுலை - 1995
( எனவே இனி )

## ஓலமிடும் இதயங்கள்.

போலியான சாயமிடப்பட்ட
உங்கள் உதடுகளை
அறுத்தெறிக!
நாக்குகளைக் கத்தரிக்க
இதயத்தை வெளியிலெடுக்க
அதை
வெண்ணிறப் பால் கொண்டு
கழுவுக
கறைகளைக் 'கத்தி' கொண்டு
கடைந்தெறிக

இப்பொழுதும்
நினைக்க வேண்டாம்......
நாம் சுத்தமடைந்து விட்டோம்....
மேசைக்குப் போகத் தயார்
என்று

இடைவழிகளில்
ஒட்டிக் கொள்ளத் துடிக்கும்
உண்ணிகள் உங்களை
எதிர் கொள்கின்றன
அவை இனவாதப் பேய்கள்
உங்களது காதுகளினூடாக

அல்லது
இதயத்துள் செல்வன
கண்களினூடாகவும்
பூட்டுக!
கறைகள் எடுக்கப்பட்டு
பாலால் கழுவப்பட்ட
இதயத்தின் வெளிக்கதவுகள்
யாவற்றையும்!
உட்கதவுகளை மட்டும்
திறந்து வைக்க!

குண்டு வெடிப்புகளையும்,
கூட்டியும் பொறுக்கியும்
அள்ளும் உடலங்களையும்
எரிக்கப்படும்
கிராமங்களையும்
ஓடிக் கொண்டிருக்கும்
இரத்த ஆறுகளையும்,
விதவைகளின் ஓலங்களையும்
அவர்கள் கன்னங்களில்
பாதையுண்டாக்கிக்
கொண்டிருக்கும்
கண்ணீர் அருவிகளையும்
நின்று நிதானிக்க......
இப்பொழுது ஒரு கணம்!
அசை போடுக
அழியும் உலகத்தையும்
அழியா உலகங்களையும்
பேச்சு வார்த்தைக்கு
வரும் பொழுது மட்டும்
இதயத்தை
மேசை மீது
எடுத்து வைக்க

(தினக்கதிர்)
19.08.2000

# ஏழு வெள்ளம் போடும் மாரி

வானத்துக்கு
விரிச்சகை
ஊற்றத் தொடங்கிவிட்டது
இனிமாரி

காற்றின்
உடம்பெல்லாம்
ஊசி
குத்தத் தொடங்கிவிட்டது.
இது
கூதல்

இந்தமாரி
ஏழு வெள்ளம் போடுமாம்
நாளும் பெய்யுது மழை!
பெய்யட்டும்!

இந்த மார்கழியில்
மணமுடிப்பவர்தாம்
அதிஷ்டசாலிகள்.....!
ஆளை ஆள்
கவட்டுக்குள் அணைக்க
இதுவேளை!

பார்.....!
மழைவிடும் இடைவேளை
வானத்தின் ஒரு
பள்ளக்கையில் படுத்துக் கொண்டு
சூரியன் உறுஞ்சி
உறிஞ்சிவிடு
புகைக்காட்டுப்பேய்கள்
ஓடு வானம்!
வா குளிக்கலாம்...
இன்னும் சற்றுநேரத்தில்
இருட்டுவானம்
என்வீட்டுப்பீலியால்
ஊற்றப் போகிறது
ஒரு கடலை

24/22/1994
(சரிநிகர்)

# குட்டித் தாய்ச்சி

ஆகாது பாவம்..... விரட்டாதே!
முடாப்பானை போல
வயிறு
ஐந்தாறு குட்டிகளை
ஈனுமாக்கும்.

விரட்டாத விரட்டாத
ஆகாது பாவம்!
இந்தக்குட்டித்தாய்ச்சி
இருந்த இடமெல்லாம்
வெள்ளமும் தண்ணியுமாக்
கிடக்கு இப்போது.
என்னமாய்க் கொடுவுது
ஆற்றையும் கடலையும்....
வெள்ளக்காட்டையும் தொட்டு
வருகிற இந்த ஜில் காற்று
பட்டவுடன்
என்னமாய்க் கொடுவுது....
பாவம்....
போர்த்திவிட ஒரு போர்வைகொடு!
உனக்கு ஒரு
செய்தி தெரியுமா....

ஈனப்படப்போகும் இந்த
குட்டிகளின் தந்தையை
இரைதேடிப் போனவிடத்தில்
காணாமல் போ(னது)னார்.
சீ
நீ என்ன மனிஷன்
இவ்வளவு கதைச்சும்....
சரி நீ....
ஏசு....திட்டு.... அதன்
உடம்புக்குள்ளும் பூராது
நெஞ்சுக்குள்ளும் பூராது
ஆனால் விரட்டாத!
ஆக்கித்திண்ட சோத்தோடும்
உடுத்தி இருந்த உடுப்போடும்
ஒரு வேலைக்காரனென்று
என்னை விரட்டி இருக்கிறாயே....
வெளியேறு என்று சொல்லி
இருக்கிறாயே.... அப்படி....
அந்த வாய்பேசாப்பிராணியை....

பூனைப்பழி பொல்லாப்பழி
அதன் ஒரு மயிர்விழுந்துவிட்டால்
வானம் போல
ரொட்டி சுட்டுக் கொடுக்க வேண்டுமாம்.

இன்றைக்கோ நாளைக்கோ
இது ஈன்றுவிடும் குட்டிகளை....
வயிறு நன்றாக இறங்கியிருக்கு.
அதுவரை அதுவரை
உனதுவீட்டுத் தாழ்வாரத்தில்
இந்தப் பரிதாப ஜீவனை
குந்திக் கொண்டிருக்க விடுவாயா....
விட்டு விடு

ஆகாது பாவம்!
இனியும் விரட்டாத...!
பூனைப்பழி பொல்லாப்பழி
அதன் ஒரு மயிர் விழுந்துவிட்டால்
வானம் போல
ரொட்டி சுட்டுக் கொடுக்க வேண்டுமாம்.

பூனையென்றபடியால்தான்
விரட்டுகிறாய்
புலியென்றால் விரட்டுவாயா....?

14/07/1994

## வா வந்து சுடு

துப்பாக்கியை உடைத்து நொருக்கி விட்டுப்
பேசு என்னிடம்
நீ இப்படித்தான் நெடுகிலும்.....

நான் தவண்டு திரிஞ்சதும்
என்னை ஊட்டி வளர்த்ததும்
இந்தப் பூமி தான்......

313 அஸஹாபுகளின் விசுவாசம்
எனக்குள் வேர்களாகி நாளும்
நான் நிமிருகையில்......
நீ வேறு வந்து
தீயை மூட்டுவதும் என் நெஞ்சத்தைத்
திருப்பித் திருப்பிச் சுடுவதுமாய்.....!

ஆயுத வணங்கி!
அறத்தின் மார்புகளை
வெட்டிக் கீலம் பண்ணி மகிழும்
உன் கடைசிகாலம் இதுதான்.....

என் வேதத்தில் உள்ளபடி
ஒவ்வொரு வெள்ளி இரவுகளையும்
நான் எதிர்பார்க்கிறேன்......

பஞ்சாய்ப் பறக்கும் மலைகள் வெடிக்கும்!
கை கோர்க்கும் ஆறும் கடலும்
கட்டிப் புரளும்!
பூமி கொட்டாவி விடும்
ஒரே ஒரு முறை
நீயும் நானும் அப்போது கிடப்போம்
வயிறூதிச் செத்த மாடுகள் போலவும்
வெள்ளத்தில் அடிபட்ட கெழுத்திகள் போலவும்

இஸ்ராபீலின் ஊது குழலுக்கு எக்காளமிட
இறைவன் ஏவும் வரைதான்......
நீ என்னை அச்சமூட்டுவாய்......!
உனது ஆயுதக் கிடங்குகளுக்குள்ளும்
அணு உலைகளுக்குள்ளும் இருந்து கொண்டு

முட்டாள்!
என் தந்தையின் விந்தும்
என் தாயின் முலைப்பாலும்
கிளைவிட்டுப் பரந்து போய்க் கிடக்கும்
என் பாச மண்ணை விட்டும்
ஒரு சதுர அடி கூட
நகர முடியாது என்னால்!
முடியுமானால் என் நெஞ்சில்
சுட்டுப் போட்டு எடுத்துக் கொள்.
இந்தப் பூமியை!
இன்னும் முடியுமானால் உன்னை
மனிதன் என்றும் சொல்லிக் கொள்!

05/10/1995
(சரிநிகர்)

## சிவப்பு இரவு

ஆண்கள் வாசம்
இல்லத்துப் போன
முதலாம் குறிச்சித்தெரு.....

சில்லறைகள் போலவும்
மைனாக்கள் போலவும்
கலகலத்துவிட்டு
கிடப்பதைப் பாருங்கள்
மூர்ச்சையாகி......

மாலை ஆயிற்று
உங்களில் யாரால்
நடந்து செல்ல முடியும்......?

தார் ரோட்டு நெடுகிலும்
தலைவைத்துப்படுக்கிறது
இருட்டுப் பேய்!

குப்பி விளக்கின் இலேசான
மங்கிய வெளிச்சத்தில்
பின்னும் பாயின் மடிப்புகளுள்ளும்
சுற்றும் நூற்கட்டைகளுள்ளும்
சிக்கும் நினைவுகளோடு வாழும்
விழிமூடா விதவைகளின்

வசிப்பிடம் இங்கே தான்
கணவன் கடைசியாக
கையசைத்துச் சென்றதையும்
பின் இரத்தச் சகதிக்குள்
அவன்முகம்
பப்படம் போல
ஊதிக்கிடந்ததையும்......

அதோ......
நாய்களின் ஊளைகள்
ஆந்தைகளின் அலறல்கள்
முடியுமானால் நீங்கள்
பயணம் செய்து பார்க்கலாம்
இந்தத் தெருவில் ஒரே ஒரு முறை

ஞாபகம் இருக்கிறதா உனக்கு.....
கிறவல் தெரு பள்ளியிலும்
ஹுஸைனிப்பாவிலும்
ஒரு சட்டிக்கறியாக அகப்பட்டு
ஆண்கள் யாவரும்
இல்லத்துப் போனதான
சிகப்பு இரவுகள்!
சிகப்பு இரவு!
கொடுமையானது.....
அவர்கள்
பூனைகளின் முதுகுப்
புறமாக வந்து நின்று
துப்பாக்கிகளால் ஒருடம்பில்
நூறுதுளைகள் போட்டுச்
சென்ற இரவு.

செவிகள் இருக்கிறதா உனக்கு
என் அருகினில் வா
இந்த விதவைகளும்
இன்னும் சில இரவுகளில்
இல்லத்துப் போகலாம்.
அவர்கள் குழந்தைகளும்
ரத்த ஆறுகளில்
வயிறூதி மிதக்கலாம்.

ஆனாலுமென்ன
நீயும் நானும்
இவை பற்றியே இப்பொழுதும்
இன்னும் யோசித்துக்
கொண்டிருக்கிறோம்

வீட்டை யாருக்காவது
விற்றுவிடுவது பற்றி......
அதன் தளபாடங்களை
லொறியில் வெளியூருக்கு
அப்புறப்படுத்துவது பற்றி.....
ஊரைவிட்டு எப்பொழுது
ஓடுவது என்பது பற்றி
கொழும்பில் எடுக்க இருக்கும்
பங்களா எப்படியானது
என்பது பற்றி......

05/08/1999

சரிநிகர்

## மண்டை ஓடுகளும் சில எலும்புக் கூடுகளும்

மண்டையோடுகள்
கொஞ்சம் கிடைத்தன
கட்டி வைத்திருக்கின்றேன்
சாக்கு சாக்குகளாய்.......
வாருங்கள்
புதியவீடுகட்டியவர்கள்
கொண்டு செல்லுங்கள்
பூசணிக்காய்க்கு பதிலாக
தொங்கப்போடுங்கள்!

இவை
தமிழின்
உயிர்க்குறில்கள் சிலதையும்
அதன் நெடில்கள் பலதையும்
வெடித்துக் கொண்டு
உயிர்விட்ட மண்டையோடுகள்!

அது
விடிந்தும் விடியாத வைகறை.....
நான் நன்றாக
ஞாபகம் வைத்திருக்கின்றேன்.....
ஒரு
கோரமூஞ்சிக்காரன்தான்
கொண்டிங்கு போட்டான்.....

மூளை பிதுங்கி கொட்டுண்டும்
குடல்கள் வழிந்தும் வழியாததும்
கன்னத்துவாரத்தால்
குருதி ஒழுகியதுமான
இவைகளை!

அவன் கிழித்துப் போட்ட
இந்த நாற்றப் பிண்டங்களை
மண்களும், புழுக்களும்
நாய்களும், காகங்களும்
மழையும், வெயிலும் தாம்
சுத்தப்படுத்தித்தந்தன
எனக்கு.

இனி
கடதாசிப் பெட்டி எதற்கு......?
வீட்டுக் குருவிகள் ஆடவும்
பாடவும், முட்டையிட்டு
குஞ்சி பொரிக்கவும்
மனிதவாய் நின்று
உணவை ஊட்டவுமான
கூடுவந்து விட்டது பார்!

ராக்கால நாய்களுக்கும்
இனி வேலையில்லை.....
கயிற்றில் தொங்கி
காற்றில் ஆடுது பார்.....
மண்டையோடு! ஆ.....!
அது என்னமாய் ஆடுது!

இன்னும் கொஞ்சம்
எலும்புக்கூடுகள் மீதி......
முடிந்தால் இவைகளை
முச்சந்தி, கல்லூரி
காரியாலயங்கள், நகரக்
கடைவீதி என்று கட்டுங்கள்!
மனிதன்
மரணத்தை வாசிப்பான்!

முடியாது போனால் தாருங்கள்.......
மாட்டின் எலும்புகளை
ஏற்றுமதி செய்யும்
கடைக்காரனுக்குக்
கொடுப்பேன் நான்
புதுப்பீங்கான் பிறந்து
உடையும் போதாவது
உச்சரிக்கும்.....
மனிதன் மிருகத்தோடு
கலந்துவிட்ட உண்மையை!

02/06/1994
(சரிநிகர்)

## விலங்குகளுக்குள்
## முடக்கப்பட்ட என் சுதந்திரம்.....!

இரவு என் தோழன்
கடற்கரை எனது வீடு
அதில் தவழும் தென்றல் எனது காதலி.
நான் அவளின் மடியன்னதான
குருத்து மணல் கும்பத்தில்
தலை வைப்பேன்.

வானத்தில் பூத்துக் கிடக்கும் வெள்ளிகள் போல்
என்னைச் சூழவும் மனித வெள்ளிகள்!
அச்சம் அகராதியில் மட்டுமிருந்த அக்காலத்தில்

செக்கச் செவேலெனப் பொரித்தெடுக்கப்பட்ட
கிழங்குப் பொட்டலங்களும்
இறைச்சிப் பொட்டலங்களும்
சௌந்தர்ராஜன் பாடல்களும் தவிர
ஒரு சிறு அளவு
அரசியல் அன்னியம் இருந்ததில்லை
எமக்குள்
ஒருவனை வெட்டி அல்லது
சுட்டுக்கொன்ற கதை கூட

காலமென்றால் அதுதான் காலம்
இரும்புச் சங்கிலிகளில் ஒடுக்கிவிடுகின்ற
விலங்குகளில்லாத காலம்!!

கைகளுக்கும் கால்களுக்கும்
கண்களுக்கும் காதுகளுக்கும்
கனவுகளுக்கும் கற்பனைகளுக்கும் - ஏன்
கருத்துக்களுக்கும்!

நான் அழைந்த மண் இன்று
எனக்கு அச்சமூட்டுகிறது
இதயத்தின் அடிவாரம் வரை அடக்கி
அது எச்சரிக்கிறது.

பதுக்கி வைத்திருக்கிறது காலம்
மனிதனின் விதியை
தன் இறக்கைகளுக்குள்

அது தன் நீண்ட மூச்சுக்களால்
நமது கனவுகளைக் கோட்டைகளாக்கவும்
கோட்டைகளைக் கனவாக்கித் தகர்த்தெறியவும்
அதிகாரம் பெற்றுவிட்டது.

மனிதனே!
அந்த அதிகாரத்தை மீளப்பெறமுடியா
உன் பலவீனத்தை எண்ணும் போது
என் மூச்சின் உஷ்ணம் இன்னும்
உக்கிரமிக்கிறது உன்மீது!

உன்னையும் கருமை பாசிபோல் படர்ந்த
உன்னிதயத்தையும் நான் வெறுக்கிறேன்......

நிலவை ரசித்துக் கொண்டிருந்த
என் முற்றம்
பறிபோய் விட்டதற்காக!

தேனை உண்டுகொண்டிருந்த
என் செவியின் ஓரம்
போரின் ஓசைகளை
கொண்டுவந்து கொட்டியதற்காக!

என் மொழிப்பறவையின்
நீண்டு வளர்ந்திருந்த இறக்கைகளை
அடித்து ஒடித்து விட்டதற்காக

எனது கைகளுக்கும்
கால்களுக்கும்
கட்டுப் போட்டதற்காக!

23/12/2000
(தினக்கதிர்)

## நான் ஆவலாய்
## எதிர்பார்த்த நட்சத்திரங்கள்.....

நட்சத்திரமா அது!....
தெரிவது என்ன....?

மேகம் மூடியும் மூடாமலும்
துலங்கியும் துலங்காமலும்
தெரிகிறதே தூரத்தே
அது என்ன.......?

உண்மையில் அது
தன்னை மறைக்க நினைக்கிறதா.....?

காற்று ஏன் மேகங்களை
இழுத்துவந்து அதனைப் போர்த்த
வேண்டும்?

உண்மையில் அது ஒரு
விடிவெள்ளி என்று
இன்னும் நான் நம்பமுடியுமா?

இன்னும்....
வைகறையை விரும்பி
நான் எழுகின்ற கொஞ்சநாட்களாக
வானம் இப்படித்தான்

சிணுங்குவதும்
கொஞ்சம் கொஞ்சமாக
சிலுசிலுப்பதுமாய்.....

முந்தியும் இப்படித்தான்
நான் ஆவலாய் எதிர்பார்த்திருந்த
நட்சத்திரங்கள்
எரிந்து விழுந்திருக்கின்றன!

என் கண்கள் தரப்பு
காதல் ஒப்பந்தம் செய்த சில
கணங்களில் அவை
வெடித்துச் சிதறின.....!

என் அகன்ற வானமந்நேரம்
மிகவுமே வருந்தியழுத
ஞாபகம் வருகிறதிப்போது

நண்பனே சொல்!.....
நாம் நினைக்கிறபடி
துலங்கிவருவது போல் தானே
அது தெரிகிறது.....

எனக்குத் தெரியும்!.....
எனினும் அது
நட்சத்திரமோ விடிவெள்ளியோ
அல்லவென்பது!

வல்லரசுகளின்
செயற்கைக் கோள்களாக
அவை இருக்கக்கூடும்.....

## தூண்டில் பொறுத்த மீன் மாதிரி நான்

நீங்கள்
போதையிலே இருக்கிறீர்கள்
உங்கள் தலை, கண்
மனம் எல்லாம் வெறியில்
இன்னும்
எங்கள்முன் உட்கார்ந்திருக்கும்
உங்களுக்கு
ஒரு முகமில்லை

பாலைப்போல
நீங்கள் இல்லீர்!
உங்கள் வெளிஆடைகளுக்குமட்டும்
வெண்மை அதிகம்
நாம் ஒவ்வொரு அமர்விலும்
ஏமாறும் மந்தைகள்!

பிளாத்திக் கொத்துகளைக்
காட்டி
எம்மை அழைக்கும்
மேய்ப்பர் நீங்கள்!

இலங்கை எனப்படுகின்ற
ஓர் அழகான பூந்தோட்டம்
உம் வசம் உள்ளது

அதில் ஒரு மர நிழலில்
இளைப்பாறும் உரிமையும்
நாமிழந்தோம்

ஒரு முழுமையான
ஆக்கிரமிப்பின்
மொத்த குத்தகைக்காரர்
நீங்கள்
கல்லைவிடவும் கனதியான
மிகக் கனதியான இதயத்தவர்!

ஊதுபத்தி கமழும் எமது
இதயாலயங்களில்
நச்சுப் புகை மண்டலங்களை
கொண்டு வந்து
கொட்டியவர்

சகோதரர்களே.....
உலகில் சிறுத்துப் போயிருக்கும்
உமது தேசத்தைவிட
எமது யுத்தங்கள் பெரியவை!
எமது வீரர்களின் புயங்களைவிட
அவர்கள் சுமந்திருக்கும்
ஆயுதங்களுக்கு கனதி அதிகம்

உஷார் மடையர்களைப் போல
அவர்கள் அடர்ந்த வனங்களினூடாக
முன்னேறி
மொத்தமாய் வீழ்கின்றனர்!

எமது வரிகள் வெளிநாட்டு உதவிகள் யாவும்
அபிவிருத்திகளையும்
தொழிற்சாலைகளையும்
வேலைவாய்ப்புக்களையும்
கண்டிருக்க வேண்டுமிந்நேரம்.....!

ஆயினும்
கப்பல்களின் வடிவில்
கடலில் எரிந்து கருகிக்
கரைகின்றன எமது செல்வங்கள்!
விமானங்களாகவும்
வீழ்ந்து நொருங்குகின்றன......
எமது கண்களுக்கு
(புராதன) புதையல் தோண்டும் படலம்காட்டி
மறுகையால்
உடல்களை எரித்துப் போடுகிற
மரபு வழிகள் தொடர்கின்றன

பிறந்த தாயகம் முழுக்க
யுத்தம் நிரம்பி வழிகிறது
ரெனிஸ் பந்து போல
நாம் அடித்து விரட்டப்படுகிறோம்
லொட்ஜுகளில் ஒவ்வொரு பொழுதும்
பேயைப் போல் அச்சமூட்டி
எம்மைச் சப்பித்துப்புகிறது!

இன்ன அவலங்கள்
இன்று விடிய விடிய
ஒவ்வொரு தாயின் கண்களினூடு
வடிந்து கொண்டும்
ஒவ்வொரு விதவையின்
சுவாசங்களினூடு கொதித்தும்
என்னை உசுப்புகின்றன.

நண்பனே,
உனக்கென்ன
நீ பசியை மறந்து
கிரிக்கட் பார்க்கப்பழகிப் போனாய்
தொலைக்காட்சிப் பெட்டிக்கு
முன்னமர்ந்து துள்ளவும்
முடிகிறது உன்னால்

என்னைப்பார்.......
தன்னை ஓர் இலங்கையன்
என்று சொல்ல
சங்கடப்படும்
மிகச் சங்கடப்படும்
வெம்பிப் போன மாங்காய் மாதிரியான
என் இதயத்தைப் பார்!......
தூண்டில் பொறுத்த
மீன்மாதிரி நான்.....!

## தலைப்பாரமிறக்கி

முதியோர் இல்லத்தில்
தலைப்பாரமிறக்கி விரையுமென்
மகனே......
அன்புமகனே......
இங்ஙனமே சென்றேன்மகனே
நானுமுனைப்பாடசாலையில் சேர்த்த அந்நாளில்!
அந்தபாலர் வகுப்பில் நீநின்று
நான் மறையும் வரை நோக்கியவாறே....
கசியுமென்னிருவிழிகளுமிப்போது....
நீ பின்னால் தொடர்வாயோ நிழல்போல
எனுமச்சத்தோடே நான் நடந்தேன்
விரைவாக நடந்தேன்மகனே..... இவ்வாறு....

வருகையில் நீ வளர்ந்து வளர்பிறைபோல்
பாடசாலையின் விடுதியில் சேர்த்தேனுனை.
அக்காலை வறுமையின் வகையறியாப்
பறவை நீ.
நீ வீட்டுக்குத் திரும்பக் கூடாதென்று நான்
நினைத்ததையா நினைக்கிறாய் மகனே நீயுமின்று.

என்பிள்ளைகள் ஐவரில் ஏனைய நால்வரும்
எங்கே மகனே.....
நான் வீதிக்கு வந்தநான்காண்டுகளில்....

நொம்பலப்படக்கூடாதென்றுன்னம்மாவினுட(ன்)ல்
தனியாக தட்டத் தனியாக
நான்பட்ட துன்பவஸ்தைகளில் எதைஅறிவீர் நீர்?
ஆக்கிப்போட அடுப்பு ஊதிஊதியே....

கடைசியில்....!
உங்கள் போக்குக் குறித்த கவலையோடேயே...
செத்துப்போனாளவள் குக்கிக்... குக்கி...

நான் பெறுமதிஅற்றவன்...
அவளது காலடியில் ஒட்டி இருக்கும் ஒரு
மண்ணிற்கும்...!
நீங்கள் எல்லீருமே அவள்
பாதணியில் ஒட்டியிருக்கும் ஒரு
சிறுமண்ணிற்குக் கூட...!

உங்கள் இதயத்தில் உள்ள சிற்றறைகளின்
ஒர்மூலையலேனும் அவள்நினைவின் ஒரு
துளிக்கசிவைக்கூட காட்டமுடியாதுதானும்மால்....!

அவள் தாய்க்குலத்தின்
தனிப்பெருந்தேவி!
சொர்க்கத்து மாதர்களின்
கைச்செந்தாமரைகள்
அவளை உள்வாங்கி
மலர்ந்து மணத்தன
அவள் -
நினைக்க நினைக்க
ஊறும் ஊற்று நெஞ்சில்
ஒருபோதுமோயா வருடும்
தென்றல் காற்று.

## எனது சோற்றுப்பானை பற்றிய இரவு.....!

இரவு ஒரு மணிக்குத் தொடங்கிற்று.....
தீயாயொன்று பாய்ந்தது.....
குடல் நெஞ்சு எல்லாவற்றையும் ஊடறுத்து
நாசியினூடாகவும்

எழுந்து சென்று ஒருமிடறு இருமிடறு
என அணைத்தேன்
சூரியனைக் கையால் பொத்திப்பிடித்தல்
எங்ஙனம்?

கல்லைக் கட்டி இருந்தார்கள் வயிற்றில்
நபிகள் நாயகம் பசியின்போது
மூன்று தினங்கள்.....
தலையில் கிடந்த அணையை எடுத்தேன்
நெஞ்சோடு பற்றினேன்
பஞ்செல்லாம் எரியத் தொடங்கிற்று
பற்றி

நேற்று என் வீட்டுக்கு இறைவன் வந்தான்
பசிக்கு உணவு கேட்டான்
“பிச்சைக்கார நாயே போய்விடு”
என்றேன்
முகம் வாடிப் பின்சென்றான்

மறுமையில் இறைவன் வருவானாம்
“உலகில் உன்னிடம் உணவு கேட்டு
வந்தேனே..... தந்தாயா.....?
தந்திருந்தால் என்னைப்
பெற்றிருப்பாய்” என்பானாம்

படுக்கை நிறைய முட்கள்
புரண்டு புரண்டு படுக்கிறேன்.....
நோக்கும் திசையெல்லாம் அவன்முகம்!

இன்றும் அவன் எந்த மூலையில்
கிடந்து எரிவான்?

## ஆத்மாவுக்கு தூண்கள் தரும் சங்கிலித் தொடர்கள்.

நண்பர்களே!

வலிமார்களின் நினைவென்பது
ஓர் இனிக்கும் மிட்டாய்.
அதற்காகவே நாம் கூடினோம்.
உற்சாகமுள்ள எறும்புகளாக!

இன்னும் அது ஓர்
உயர்மலைத்
தேன் கூடும் கூட.
அதனாற்றான்
எமது களங்களைச் சுற்றி
பக்தர்கள் இன்னும்
மொய்த்துக்கொண்டிருக்கின்றனர்.
தேனீக்களாக!

அஜ்மீர் அரசர் அதாயேறசூல்
ஹஸ்றத்ஹாஜா
முயீனுத்தீன்சிஷ்தீ (றழி) அவர்களே!
சாஹிபுல்ஜலால், சர்தாரே சர்வார்
ஹஸ்றத் ஹாஜா
பக்றுத்தீன் சிஷ்தி (றழி) அவர்களே!

நீங்கள் எங்கள்
நேசத்திற்குரிய ரோஜாக்கள்!
11வது வருடமாகவும்
எமது இதயம், சிரசு
என்பன
உங்களைச் சூடிக்கொள்வதில்
உச்சிகுளிர்கின்றன மிகவும்

உங்கள் ஒவ்வொரு இதழ்களையும்
இங்குநாம்
உற்றுப் பார்க்கிற பொழுது
அதில் பல்லாயிரம் மக்கள்
வீற்றிருந்து
பசியாறுகின்றனர்.
இன்னும்
ஆறு கடல்களாய் அதில்
அருள் பொங்கி வழிகிறது!

அளந்தறிய முடியா
அற்புத மின்னல்கள்
பளிச்சிடுகின்றன!

அருமையுறு
அழகிய ரோஜாக்களே!
எமது மண் மணக்கிறது
உங்கள் வருகைக்காக!

எமது இதயங்கள்
ஏங்குகின்றன உங்கள்
அருள் பார்வைக்காக!
வஹ்ஹாபிஸ கொள்கை வாதிகளே,
ஓர் அகன்ற சமுத்திரத்தின்
ஆழ நீளங்களை
கரையில் நின்றவாறு
உங்களால்
கணிப்பிட முடியாது!
இப்பொழுதும் நாம் சொல்வதென்ன....
அதற்கு ஒரு சிறிய
படகாயினும் தேவை உங்களுக்கு!
இதுவே எமது வாதம்.

அவ்லியாக்கள்
அல்லாஹ் நியமித்த அதிகாரிகள்
நாம் அவர்களின்
சங்கிலித் தொடர்களில்
தொங்கிக் கொள்ளத்துடிக்கும்
உண்மை ஊழியர்கள்.

இன்ஷா அல்லாஹ்.....
இறுதி நாள் வரை
நாம் அவர்களுக்காக
விழித்திருப்போம்,

விழாவெடுப்போம்
திருக்கொடியேற்றுவோம்,
தெருவெல்லாம் சோடிப்போம்
பந்தல் கட்டுவோம்,
பளிச் பளிச் என சுடர்விடும்
தோரணம் அமைப்போம்,
மணங்கமழும் மலர்களாலும்
வர்ணங்களாலும்
மஜ்லிஸை அலங்கரிப்போம்!

அஜ்மீர் அரசரே!
அவர்தம்
அன்புப் புதல்வரே!
எமது ஆத்மாக்களுக்கு
தூண்கள் கிடைக்கின்றன....
உங்களை நினைக்கும் பொழுதும்
உங்கள் திருநாமங்களை
உச்சரிக்கும் பொழுதும்,
எமது நாட்டங்கள்
கரைசேர்கின்றன....
உங்களுக்கு நேர்ச்சை
செய்கின்ற பொழுதும்,
உங்களை விளித்து
உயிருருகிப் பாடுகின்ற பொழுதும்.

*வலிமார்களே உங்கள் வரவு*
*நல்வரவாகுக! நாம் உங்கள்*
*பாதங்களைப் பற்றுகிறோம்*
*எமக்கு அருள் புரியுங்கள்!*

இவர்களின் சமாதி இந்தியாவில் அஜ்மீர் நகரில் அமைந்துள்ளது. பல்லாயிரக் கணக்கான மக்கள் இன மத மொழி வேறுபாடின்றி தினமும் அவர்களின் தர்ஹாவுக்கு வருகின்றனர். அருள் பெறுகின்றனர்.

90 இலட்சம் மக்களை இஸ்லாத்தில் இணைத்தவர்கள் அனாஸ்கார் நதியை ஒரு சந்தர்ப்பத்தில் தனது கூஜாவுக்குள் அடைத்தவர்கள். ஏழைகளுக்கு அதிகம் உதவி செய்வதால் இவர்களை "கரீப்நவாஸ்" ஹாஜாமுயீனுத்தீன் சிஷ்தீ (றழி) என மக்கள் அழைக்கின்றனர். 20000 மக்களுக்கு அன்னதானம் வழங்கி காத்தான்குடி - 6 பத்ரிய் யஹ் ஜும்அஹ் பள்ளியில் இவர்களின் நினைவு தினம் (கந்தூரி) கொண்டாடப்பட்ட போது எழுதப்பட்ட கவிதை இது.

## எரிவும் பிரிவும்

ஓ... என்
இதய உம்மா...
உங்களது
நிர்மலமான...
உருவத்தின் பிரிவை
நினைத்தாலே...
என் நெஞ்சு
நெருப்பாய் எரிகிறது!
அனேக மக்கள்,
அவர் பெற்றோர்
பிரிவின் பின் -
ஆஸ்திகளைப் பிரித்து
எடுக்கவே யோசிப்பர்,
நானோ இன்னும்
பரிசுத்தமான உங்கள்
ஆன்மாவையே
நேசிக்கிறேன்!

*

சதையினை எமக்களித்து,
சக்கையினைத் தானுண்டு
விதையிலிருந்து என்னை
விருட்சமாக்கி விட்டு

என் -
நிழலைப் பெற நிற்காமலே
நேரமற்றுப் போய்விட்ட
உங்கள் -
மறுமைப் பயணத்தை
நினைக்கத்தான்...
என் நெஞ்சு...
நெருப்பாய் எரிகிறது!

*

பூவையரிற் சிறந்த
அன்பூ வடிவே...
உங்கள் -
(பாசத் தழுவலுடன்)
இதயத்தில்
பெருக்கெடுக்கும்
அன்புத்தேனைப் -
பருகி,
பழக்கப்பட்ட என்
இதய கரும்பு
அந்தத் தேன் குடிக்க -
இப்போது
இறக்கையினை
விரிக்கையிலே...
ஏமாந்து போகிறதே!
அப்போது என் -
இதயம் நோ(வே)கிறதே!...
ஓ...
'நல்ல பண்டம் கடையில்
நீண்ட நேரம்
இருப்பதே இல்லையாம்'
அதனால்தான்,

ஆண்டவனும் உங்களினை
அவன்பால் விரும்பி
அழைத்துக் கொண்டானோ!
உம்மா...
மனிதன் பரதேசி
என்பதனை உங்கள்
மரணப் பாடமாகப் - பாருக்குப்
புகட்டத்தானோ...
உம்மா...!
உங்களுயிர் எடுக்கையிலே
இஸ்ராயீல் கூட
இரக்கப்பட்டுள்ளார்
போலும்...!
ஏனெனில்,
உங்களது உயிரை அவர்
பிடுங்கி எடுக்காது
பூப்போன்றே
பற்றியுள்ளார்!
அதனாற்றானோ...
உயிர் பிரிந்த
உங்கள் வதனம்
பூப் போன்ற
மலர்ச்சி பெற்று
பொலிவாக இலங்கியது!
உங்கள் அந்த அன்பு
வனப்பு வதனம் தன்னை
இழந்து விட்டவனாய்...
இருப்பதனை

நினைக்கையிலேதான்...
உம்மா...
என் நெஞ்சு
நெருப்பாய் எரிகிறது!

*

உம்மா -
உங்களது
மரணச் சடங்கிற்கு
மந்திரிக்கும் இல்லாத
மனுக் கூட்டம்!
எப்படித்தான்
இவ்வளவு
சனத்தையும் நீங்கள்
சம்பாதித்தீர்களோ...!

*

வாராவாரம் நீங்கள் - எம்
வாசலிலே இருப்பாட்டி
பட்டினிக்குத் தீனி -
போடுவீர்களே... அந்த
ஒட்டிய உருவங்கள்...
உங்கள் இறப்புச்
செய்தி கேட்டு
உடலிலும், தலையிலும்

அடித்துக் கொண்டு
உயிரையே விட்டு -
விடுகின்றனர்!
அவர்கள் -
விழிகள் செலுத்திய
காணிக்கைகள் எமது
வீட்டு வாசலில்
வெள்ளமாய் ஓடுகின்றன!

*

உம்மா...
நீங்கள் நடக்கின்ற போது
பூமிக்கும் நோகாது...!
பார்க்கின்ற
பார்வையில் - ஒரு
பாவமும் கலக்காது
அசைக்கின்ற நாவினிலே
பொய்யே ஒலிக்காது!
ஹறாமான பாதையிலே
உங்கள் -
பாதங்கள் நடக்காது
- சிறு
பூச்சிகளைக் கூட
உங்கள்
பூக்கரங்கள் தீண்டாது

*

உம்மா நீங்கள்
உண்மையிலே
உத்தமிதான்
சத்தியமாய்ச் சொல்லுகிறேன்
உங்களைப் போன்றொரு பெண்
உலகினிலே யார் இருப்பார்?

*

கருவறையில் சுமந்து பெற்று
கண்ணிமை போல் பாதுகாத்து
இதுவரையில் எனை வளர்த்து
எல்லையிலா அன்பைக் (கொ)காட்டி
கல்லறைக்குப் பிரிந்து சென்ற
காருண்ய அன்னையே...
உங்கள் அன்பு மகனின் இதய
கண்ணீர் சிந்திய
காணிக்கை இந்த கவிதாஞ்சலி!

07/07/1984
தினகரன்

## அழைப்பு !

மரணம் உன்னை
மண்ணறை அழைக்கும்

சொத்து, சுகங்கள்,
பட்டம், பதவிகள் -
அனைத்தும் அந்நாள்
உன்னிடமிருந்து
பிரிவிடை கூறும்!

பிரிவிடை கூறுமுன் -
சொத்துக்களுக்கு,
சொந்தம் கொண்டாட
பந்தங்கள் என்று
சுற்றத்து நரிகள்
சூழ்ந்து கொள்ளும்!

தாயும் கன்றுகளுமாய் - உன்
மனையாளும் மக்களும்,
தனியே நின்று
தவியாய்த் தவிப்பர்!

அப்போதுன் -
வாயும், மெய்யும்
நிரந்தரமாக
நித்திரை கொள்ளும் -
அத்தியாயம்
ஆரம்பமாகும்!

உடன் -
அக்கம் பக்கமாய்...
அழுகை யொலிகள்
அவ்விடம் கேட்கும்!

துக்கானுஷ்டானங்கள்
தொடராய் நடக்கும்!

அக்கணம் -
கூடவிருந்து
நீலிக் கண்ணீர் -
வடிக்கும் -
குள்ள உள்ளங்கள்
மலராய் விரிந்து
புன்னகை பூக்கும்!

இறுதியாய்...
மரணச் சடங்கின்
ஊர்வலம் முடியவே...
மரணித்த உன்னை
மண்ணறை அழைக்கும்!

## புதுக் கவிதை

நீண்ட
காலத்திற்குப் பிறகு
மூளியாய் இருந்த
இந்தக் கன்னி மேனியில்
இப்பொழுதுதான்
இலக்கியம் மின்னும்
பொன்னாபரணங்கள்

பார்வை வறண்டிருந்த
காலம்போய் என்
விழிகளையே ரசிகனாக்கும்
இவள் தாவணிக்குள்
புதிய மொட்டுக்கள்

இடறிக் கொண்டிருந்த
இவள் நடைமாறி
உருவாகி வருவதோ
அன்னத்தின் நடை

கத்திக் கொண்டிருக்கும்
காக்கை போல் இல்லாமல்
குரலில் வந்திருப்பதோ
குயிலின்வளம்

இவள்
கண்கள் முழுவதும்
கனாக்கள்
விடை காணத் துடிக்கும்
பல வினாக்கள்

இருக்க நியாயமில்லை
பூவின் பூக்களுக்கும்
கிளியோபாட்ராவுக்கும்
இவளைப்போல் மென்மை
இவள் பார்வையில்
கவலையை மறக்கடிக்கும்
(கை)மருந்து இருக்கிறது

கன்னங்களில்
கடித்துச் சுவைக்க வேண்டிய
கனி(வு)கள் இருக்கின்றன

நிஜங்களுக்கு உயிரளிக்கும்
கற்பனைக் கூந்தலின்
கம்பிகளை
வருடத் தெரிந்தவர்க்கே
வயப்படும் இவளை (இன்னும்)
ஏசிக்கொண்டிருப்பவர்களோ
இயலாவாதிகள்

இவள்
வானவில் அல்ல,
வாழப்பிறந்தவள்
வாழ்வது நிச்சயம்
ஆண்டியாய் அல்ல
அரசியாய் பிறந்தவள்
ஆள்வது நிச்சயம்

ஒரே ஒரு வேதனை
கவிதையென்று
பிரசவிக்கும் பலர்
குழவிகட்கு இன்று
இவள் பெயரையல்லவா
இட்டுக்கொள்கிறார்கள்

# முடிவுக்குள்......... ஒரு விடிவு!

நாங்கள்
எதிர்காலத்தின்
எஞ்சினியர்,
டொக்டர்,
ஏ.ஜீ.ஏ. என்று
இளைய வாரிசுகளை
உருவாக்க
இரவு பகலாய் உழைக்கும் -
இணையற்ற தியாகிகள்!

நீங்கள்
இருபதாம் திகதி
எமக்கனுப்பும் வேதனம்,
எங்கள் -
வாழ்வு மேனியை
வேதனைத் தீயாய் நின்று
வேகவைக்கின்றது!

அந்த வேதனத்தின்,
அக்கினித்தாக்கத்தின்
ஆறாத தழும்புகளை இன்றைய
விலையேற்ற நகங்கள்
கீறிக் கிழிக்கின்றன!

மீண்டும்...
பச்சைக் காயங்களொடு
பரிதவிக்கும் நாம்
ஆட்சியாளர்களை நோக்கி
ஆயிரம் முறை கத்தி -
குரல் கம்மிப் போய்விட்ட
கவலைக்குரிய
காக்கைகள்!
ஓ... புரிகிறது!...

நாங்கள் -
காக்கைகள் என்பதனாற்றான்...
நீங்கள் -
கழித்துப் பரிமாறுகிறீர்கள் போலும்!

ஒற்றுமைக் கீதம் பாடும்
எங்கள் வேதனத்தில்மட்டும்
வேற்றுமை காட்டும் நீங்கள் -
ஈரமிலா இதயங்கள்!

பள்ளி செல்லும் எங்கள்
பையனின் ஆசைகளும்,
இலட்சியங்களும் இன்று
நிர்மூலமாக்கப்படுகின்றன!

எங்கள் -
பச்சிளம் குழவிகள்,
பாலுக்காய் ஓலமிடும்
பசியின் கேள்விகளுக்கு -
விடை பகர
முடியாத 'படி' யில்
விக்கித்துப்போய் நாம்
நிற்கிறோம்!

பணமேகங்களையே
முத்தமிட்டு
உயர்ந்து செல்லும்
அமைச்சுவிமானங்களே!...
பள்ளத்தில் கிடக்கும்
பரிதாபங்களான எங்களினை
பார்க்க ஏன்
தயங்குகிறீர்கள்!

துன்ப முட்கள்குத்தி
துயரக்கண்ணீர் வடிக்கும்
எங்களின் -
இவ்வாழ்வு என்ன
தொடர்கதைதானா?...

சரிந்து கிடக்குமெங்கள்
சம்பளக் கன்னியினை
சற்று நிமிர்த்தி -
சஞ்சலத்தினின்றும் நீங்கி அவளை
சமூகத்தில் எப்போது
சந்தோஷநடை -
நடக்கச்செய்வீர்கள்!?

எதிர்வரும் உங்கள்
பட்ஜட் குண்டு
எப்படி வெடிக்குமோ!...
எனும் ஐயம் எங்களினை
இனும் -
கவலை இருளினுள்ளே
புதைத்துப் பத
பதைக்க வைக்கிறது!

ஓ...
அரச பீடங்களே!
உங்கள் விழிகளை
அகலத் திறவுங்கள்!...
ஆயிரம் துன்பங்களை
அகத்தினிலே தாங்கிநாம்,
எதிர்கால சமூகத்தின்
எழுச்சிக்காய்,

ஒளியிற்காய் - மறு
மலர்ச்சிக்காய் -
ஓயாது உழைப்பதனை
உணர்விலே போட்டு,
ஒரு முடிவுக்கு வாருங்கள்!
அந்த முடிவுக்குள்ளேதான்
எங்களுடையது மட்டுமல்ல,
இந்த தேசத்தின்
விடிவே மறைந்திருக்கிறது!

(84ல் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை ஆண்டுமலரில் இடம்பெற்ற கவிதை)

## ஏய்....... நிலவே!

ஓ... நிலவே!
முடியே இல்லாத
மொட்டைத் தலைச்சி நீ!
மேகச் சிகையினைத் - தலை
மேலணிந்திருக்கின்றாய்!

✣

இருவிழியே இல்லாத
குருடி நீ...!
இரவின் ஒளிவிழியை
இரவலாய்ப் பெற்றுள்ளாய்!
நீ, உயிர்வாழ்வதே
பெரி(ய்)ய... ஆச்சரியம்தான்
மூக்கே இல்லாத நீ
மூச்சு விடுவது எப்படியோ
ஆ... நீவாழ்வது
அண்டவெளி முற்றத்திலன்றோ

✣

ஏய்!
உனக்கு...
அதாம் கூட
இல்லை(யே)யா
அல்லது,
கவிஞர்குழாம்
கடித்துச் சுவைத்து
விட்டதோ!

✣

அதோ!

அண்டவெளியில்
கொட்டுண்டு -
கிடக்கின்ற
நட்சத்திரப் பற்களெலாம்
உன்னுடையதுதானே...!
வெட்கப்படாது சொல்...!
உண்மையிலேயே.
உனக்கு வயதெத்தனை?

## சகோதரரே இரங்குங்கள்

இரக்கமுள்ள எனதன்புச்
சோதரர்காள் - உம்மிடத்தில்
இரப்பதற்கு இளைஞன் நான்
வருதல் எண்ணி
தரக்குறைவாய் எனை எண்ணிக்
கொள்ள வேண்டாம் - பணம்
தரமாட்டோ மென்று
சொல்லி விரட்ட வேண்டாம்!

அரைச்சுவர் எழுப்பத்தில்
அதோ இருக்கும்
'அபீபா'வின் சிறுமனையைப்
பூர்த்தி செய்து -
மணவாழ்வில் அவளை(க்)
கரைசேர்க்க வேண்டியதெம்
கடமையன்றோ!...
கன்னியவள் மணமுடிக்கும்
பருவமன்றோ!

இரைதேட வழியற்றோர்...
இவள் பெற்றோர்கள்!
என் செய்வர்?
இருவருமே சுகவீனர்கள்!

இந்தத் - தரைமீது
தன்மகளுக்கு(த்)
துணையொன்றிலையே...(ா)
தயாளமன முற்றோர்கள்
இங்கு இலையே(ா) - என
- மனம் -

கரைந்துருகி கண்ணீரை
வடித்து நாளும் -
கவலையிலே வாடுகின்றார்!
இவர் மகளுக்கு...
விரைவாக வீடுகட்டி
முடிக்க வேண்டும்!
எனவே நீங்கள் - மனம் -
கரைந்திந்த கன்னியிவள்
வாழ்வுமலர
கை(காசு) கொடுத்து
உதவுங்கள் நன்மை பெறுவீர்!

ஏழையர்க்கு இரங்காத
பணத்தாலிங்கு -
என்ன பயன் எமக்குண்டு?
உலகில் நாங்கள் -
நாளைய மறுமைக்காய்

என்ன செய்தோம்? என (நாம்)
நன்கிதனைச் சிந்தித்துப்
பார்க்க வேண்டும்...

பணப்
பேழையின்மேல் படுத்துறங்கும்
பழக்கந்தன்னை(ப்)
படுத்துறங்கச் செய்ய
வேண்டும்! இன்றிருந்து -
ஏழையர்க்கு ஈகின்ற
மனத்தைப் பெற்று
இங்கிதமாய் எல்லோரும்
வாழ வேண்டும்.

# ஒரு ஏழ்மை பேசுகிறது

தஞ்சம் என்று நான் சென்றால்
　　தயவைக் காட்ட ஆளில்லை!
பஞ்சம் என்று வரும் போது
　　பாசம் காட்ட ஆளில்லை!
கொஞ்சம் காய்ந்த குடலுக்குக்
　　குடிப்பதற்குக் கூழ் கேட்டால்
நெஞ்சம் இரங்கி அளிக்கின்ற
　　நெகிழ்ந்த நெஞ்சர் இன்றில்லை!

*

பாவையர் அன்பைப் பெறுதற்காய்,
　　பாலியல் இன்ப உறவுக்காய்,
பூவையர் அழகுப் பூச்சுக்காய்,
　　புதுவகை மதுநிறை புட்டிக்காய்
தேவையில் லாமல் பணம்கொட்டி
　　தீமை புரிந்திட ஆளுண்டு...
ஈவைக் கொண்டு இறைவனது
　　இரக்கம் தேட ஆளில்லை!

*

தானம் தருமம் தருவதனால்
　　தகுதி குறைந்து போய்விடுமோ?
ஈனம் என்று நினைத்தீரோ?
　　எமக்குத் தருமம் செய்வதனை!
வானம் மழையைப் பொழிவதுபோல்
　　வழங்கச் சொல்லிச் சொன்னேனா...?
ஏனம் தன்னில் பிச்சையிட
　　ஏனோ நீங்கள் தயங்குகிறீர்?

## என்னுடைய புதிய பாதை.....

கவலையைக் கனவிலும் காண்பது இல்லை - நான்
    கலைகளைப் படித்த தாலே - நறுங்
கவிகளை வடிப்ப தாலே - கேணித்
    தவளை யெனும் பெயர் தாங்கிடவில்லை - நான்
தமிழினைக் கற்ற தாலே - அதில்
    தனிச்சுவை உற்ற தாலே.

*

அச்சம் வந்தெனை அலைப்பது இல்லை - நான்
    அனைத்தையும் ரசிப்பதாலே - இறை
அணைப்பிலே இருப்ப தாலே - மெய்
    இச்சம் எந்தனைக் குலைப்பது இல்லை - என்
இருதய உறுதி யாலே - நல்
    இளமை செய் பொறுதி யாலே.

*

கலியுகக் கன்னியர் கண்வலை சிக்கிடேன்
    கவர்ச்சி பொய் என்றதாலே - அவர்
காதல் பொய் என்ப தாலே - இங்கு
    பொலிவுறு பூமியில் புன்மையை நண்ணிடேன்
புதுமையை விரும்ப லாலே - என்னில்
    புரட்சிகள் அரும்பலாலே.

## அன்புத் தங்கையே!

அடக்கமாய் வெளியேபோ தங்கையேநீ
அலங்காரம் பண்ணுவதைக் குறைத்துக் கொள்ளு
தொடக்கமாய் வேலைக்குச் செல்லுகின்றாய்
தோழியரைப் பிரிந்தென்றும் செல்லாதேநீ.
மடக்குவார் இடைவழியில் மன்மதர்கள்
மயங்குவார் விழிவலையை வீசி நிற்பார்.
படக்கெனவே பஸ்ஸைவிட்டு இறங்கிநீ யுன்
பாதநடை வேகத்தைக் கூட்டிக்கொள்ளு!

*

காலையில்நே ரத்தோடே யெழுந்துகொள்ளு,
கடவுளை நீ முதலிலே தொழுதுகொள்ளு!
வேலைகள்தான் என்னென்ன இருக்குதென்று
விரைவாக அதைச் செய்யப் பழகிக்கொள்ளு!
வேலைகள்ஆ பீசினிலே குவியும் அங்கே
வெறுங்குடலோ டிருந்தாலும் ஆகாதம்மா!
பாலையோர் போத்தலிலே கரைத்துக்கொள்ளு,
பசிவரும் போதினிலே பருகிக்கொள்ளு!

*

பெரியோரைக் கனம்பண்ணு, இயன்றவாறு
பிறருடனே அன்பாக நடந்துகொள்ளு!
மரியாதைக் குறைவாக நடவாதேநீ
மானமே பெரிதென்று எண்ணிக்கொள்ளு!
வறியோருக்கும் சிறியோருக்கும் அன்பு காட்டு
வரும்வழியில் வம்புகளில் மாட்டிடாதே!
சரியோ... நான் கூறுவதைக் கூறிவிட்டேன்,
சாண்பிள்ளை யோநீயும் அன்புத் தங்காய்!



80 களில் ஈழத்துக் கவிதைப் போக்கில் மாற்றம் ஏற்படுகின்ற தருணத்தில் மரபுக் கவிதைகளினூடாக தினகரன் மூலம் அறிமுகமானவர் தான் காத்தான்குடி றஹீம். எதுகை, மோனை, சீரும் தளையுமென கட்டியிறுக்கிக் கொண்டிருந்தவர்.

90 களில் சரிநிகரின் வருகையோடு தன் பாடு பொருளிலும், வடிவத்திலும் மாற்றம் கொள்கின்றார். யுத்தத்தின் கொடுமைகளும். அடைக்கப்பட்ட தேசத்தையும். சுதந்திரமாக நடமாட முடியாத தெருக்களையும். இரத்தம் தோய்ந்த பள்ளியென அவரின் கவிதைகள் வீரியம் கொள்கின்றன. இது அவரின் முதல்த் தொகுதியாகும்.

-த. மலர்ச்செல்வன்

பண்பாட்டலுவல்கள்
திணைக்களம், கி.மா

ISBN 978-955-4628-09-0

9789554628090